**தலவாக்கலை – லிந்துல நகர சபை**
**நுவரஎலிய மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 20 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 15 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலவாக்கலை – லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,142,563 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,602,995 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,595,206 தொகையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சியுள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,422,796 ஆகக் காணப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

காசேட்டு மீதி மற்றும் வங்கிக் கூற்று மீதி இடையே தொடர்ந்து காணப்படும் ரூபா 410,726 தொகைக்கான இணக்கமின்மையினை வெளிப்படுத்தப்படாமல் காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 116,092 தொகைக்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மத்திய அரசின் பல்வேறு அமைச்சுக்களில் இருந்து 03 வருடம் முதல் 12 வருடம் வரை காலவீச்சில் 08 செயற்திட்டங்களுக்காக பெறவேண்டிய தொகை என நிதிக்கூற்றுக்களில்

காட்டப்பட்டிருந்த ரூபா 1,064,602 தொகை பணம் தொடர்ந்தும் கிடைக்கும் என்பதற்காகன சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,486,183 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 2,466,729 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,019,454 தொகைக்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 4,019,454 இற்கான முன்னேற்றத்திற்கு 04 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் 03 செலவு விடயங்களில் குறைதலும் முக்கியமாக தாக்கப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | | | | | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடுகள் | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது சிட்டையிட் டவைகளில் அறவீடுகள் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | ஆண்டின் போது சிட்டையிட்ட வைகளில் | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 3,393,673 | 1,698,403 | 6,622,063 | 5,244,400 | 1,695,270 | 1,377,633 | 3,072,903 |
| கடை வாடகை | 551,251 | 284,027 | 3,024,283 | 2,744,845 | 267,224 | 279,438 | 546,662 |
| ஏனையவை | 64,203 | 3,464 | 3,549,522 | 3,300,175 | 60,739 | 249,345 | 310,084 |

(i) **வீத வரி**

நிலுவை வீத வரிகளை அறவீடு செய்வதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம் ஆதனங்களை தடைசெய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) **கடை வாடகை**

கடைகள் வாடகைக்கு பெற்றோர் 03 மாதங்களை விட மிகையான காலம் வாடகை செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையின் பிரகாரம் ஆதனைங்களை திருப்பி பெறவேண்டும் எனினும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 விளம்பர அறிவித்தல் பலகை கட்டணம்

சபையின் துணை விதிகளின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக சதுர அடி ஒன்றிற்கு ரூபா 50 வீதம் 2378 சதுர அடிகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 118,623 தொகையான கட்டணத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

**2.3.3 வாடி வீட்டு வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்குச் சொந்தமான வாடிவீடு மேல்கொத்மலை செயற்திட்ட நிர்மாண வேலைகளின் போது அகற்றப்பட்ட காரணத்தினால் புதிய வாடிவீடு நிர்மாணிக்கும் வரை உடன்படிக்கையின் பிரகாரம் அந்த செயற்திட்டத்தில் இருந்து சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா 2,629,962 தொகையொன்று கிடைத்திருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான வாடிவீடு மாதாந்தம் ரூபா 251,000 தொகை வாடகைக்கு வெளிசாரார் ஒருவருக்கு வழங்கியிருந்த போதிலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்க முடியாமையின் காரணத்தினால் ரூபா 100,000 தொகை வீதம் வாடகையை குறைப்பதற்கு நேரிட்டிருந்தமையால் 2015 ஆண்டிற்காக ரூபா 1,200,000 தொகையான வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 1,285,000 உம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 131,543 வும் பெறவேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

**(அ) பண்டாரனாயக்க சுற்றுவட்ட காணியை வாடகைக்கு கொடுத்தல்**

1955 நவம்பர் 09 திகதி இலக்கம் L-334 கொண்ட சாட்டுதல் கட்டளையின் மூலம் சிறிய அளவிலான மாதிரி வீடமைப்பு செயற்திட்டம் ஒன்று நிர்மாணிப்பதற்காக சபைக்குச் சாட்டப்பட்டிருந்த தலவாக்கலை பண்டாரனாயக்க சுற்று வட்டத்தில் அமைந்துள்ள 12.34 அளவான காணித்துண்டு சாட்டுதல் கட்டளையின் நிபந்தனைகள் மற்றும் நகர சபை கட்டளைச் சட்டத்தின் 33(iii) இன் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக மூன்றுமாடி வர்த்தக கட்டிடத்தொகுதி ஒன்று நிர்மாணிப்பதற்காக 03 வருட காலத்திற்கு ரூபா 2,639,998 தொகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் வாடகையாளரை தெரிவு செய்தல் வெளிப்படையான தன்மையில் நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மிடில்டன் உணவு விற்பனை நிலையம் நிர்மாணித்தல்**

மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 3,044,567 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மேற்கூறிய கட்டிடம் அமைந்திருக்கும் காணியை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

**(இ) மிடில்டன் சுற்றுலா களைப்பாறு நிலையம் வாடகைக்கு கொடுத்தல்**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மூலம் ரூபா 1,746,818 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த களைப்பாறு நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமையை சபையினால் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் காணியின் உரிமையை கோரி வெளிசாரார் ஒருவரினால் L1676 இலக்க வழக்கு நுவரஎலிய மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக சபை இந்த இடத்தை மாதாந்த வாடகை ரூபா 30,000 இற்கு வாடகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்த போதிலும், பெற்றிருந்த வைப்புத் தொகையான ரூபா 290,000 இனையும் திருப்பிச் செலுத்த நேரிட்டிருந்தது.

**(ஈ) தகனசாலைப் பராமரிப்பு மற்றும் சேவைகள்**

தகனசாலையின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கான நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்துடன் சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2016 மார்ச் 15 திகதி வரை 100 இற்கு மேற்பட்ட சடலங்கள் தகனம் செய்யப்பட்டிருந்த போதிலும் சேவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

மேல் கொத்மலை நீர்தேக்கத்தில் உள்ளாச ரீதியான படகுச் சேவை ஒன்று நடத்துவதற்காக படகுகள் கொள்வனவு செய்தல் மற்றும் இறங்குதுறை நிர்மாணிப்பதற்காக 2013 ஆண்டின் போது ரூபா 926,900 தொகையொன்றினை செலவிடப்பட்டிருந்ததுடன் நீர்தேக்கத்தை பயன்படுத்துவதற்காக மின்சார சபையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி ரூபா 120,000 தொகையொன்று வருடாந்தம் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் குறிப்பிட்ட செயற்திட்டம் 2016 மார்ச் 15 திகதி வரையும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

(அ) 2006 ஆண்டின் போது ரூபா 131,450 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த குப்பைகளை துண்டுகளாக்கப்படும் அக்கிரிடெக் மல்டி சொப்பர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 08 வருட காலத்தை மிகைத்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரை பயன்படுத்தாமல் விளைவற்று காணப்படுகின்றது.

(ஆ) 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசுரு செயற்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த உதவி நிதிகள், மாகாண குறிப்பிட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் சபை நிதியத்தை பயன்படுத்தி 2015 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 6,800,937 தொகை செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கொம்போஸ்ட் தளத்தின் செயற்பாட்டு விடயங்கள் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

**3.4 சுற்றாடல் சிக்கல்கள்**

சபையின் கழி வண்டியை பயன்படுத்தி மலசல வடிகாலமைப்புக்காக 2015 ஆண்டின் போது ரூபா 1,442,170 தொகை வருமானம் ஒன்றினை உழைத்திருந்தது. கழி வண்டியின் சேவை சபையின் அதிகாரப் பிரதேசத்திலும் அதற்கு வெளியேயும் பாரிய அளவில் வழங்கியிருந்ததுடன் ஆண்டின் போது 200 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான கழி நிரப்புகளை அகற்றியிருந்த போதிலும் மல கழிவுப்பொருள் மீள்சுழற்சி அலகு ஒன்று சபையில் காணப்படாமையின் காரணமாக கொண்டுவரப்படும் மல கழிவுப் பொருட்கள் சபையின் கழிவுப்பொருட்கள் அகற்றும் தளத்திற்கு அகற்றப்பட்டு காணப்பட்டது. கழிவுப்பொருள் தளத்தில் ஓடிச்செல்லும் கழிவு நீரினை சுத்தம் செய்வதற்காக மேல்கொத்மலை மின்சார செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவு நீரினை சுத்திகரிக்கும் அலகு (Treatment Plant) கைவிடப்பட்டிருந்த காணரத்தினால் அழிவு ஏற்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அனைத்து கழிவு நீரும் மழை நீருடன் சேர்ந்து கொத்மலை ஓயாவுக்கு ஓடிச்செல்லும் ஆபத்து ஒன்று காணப்படுகின்றது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் 07 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையும் 07 செலவு

விடயங்களில் 12 சதவீதம் முதல் 145 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் நிருவாகம்